2022 ஏப்ரல் 19]

கூட்டுறவு உற்பத்தி சங்கம் லிட். எண் 1958, அலுவலகக் கட்டடம் தற்போது வாடகைக் கட்டடத்தில் உள்ளது. சிதம்பரம் மையப் பகுதியில் சுமார் 10,000 சதுர அடியில் சங்கத்திற்குச் சொந்தமான நிலம் உள்ளது. சிதம்பரம் நகரில் நடராஜர் ஆலயமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் உள்ளதால் சிதம்பரம் நகருக்கு நாள்தோறும் சுமார் 50,000–க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றார்கள். எனவே, அதிகப்படியான பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பால் விற்பனையைக் கூட்டவும், மேற்படி இடத்தில் அலுவலகக் கட்டடம் ஒன்றினை அமைக்கவும், நவீன பாலகம் ஒன்றினை அமைத்துத் தரவும் அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியினை ஒதுக்கித் தருவார்கள் என்றால், நிச்சயமாக வெகுவிரைவில் அதனைச் செய்து தருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

131—

இ-சேவை மையம்

*927—**திரு. க. செல்வராஜ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தெற்குத் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், பெருமாநல்லூரில் இ–சேவை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வாயிலாக 13,456 இ–சேவை மையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு அலுவலகங்களுக்குச் சென்று மக்கள் காத்துக்கிடந்து திட்டங்களைப் பெறுகின்ற நிலையை மாற்றி, அனைத்துத் திட்டங்களும் மக்களுக்கு எளிதாகக் கிடைப்பதற்காக இந்தச் சேவைகளின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும் என்று கூறியதன் விளைவாக—ஏற்கெனவே 132 இ–சேவை மையங்கள் செயல்பட்டு வந்தன. தற்போது அதிகமாக 60 இ–சேவை மையங்களை அதிகரித்து, 192 இ–சேவை மையங்கள் மூலமாக மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், வருகின்ற ஆண்டில் இ–சேவை 2.0 என்ற திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் நாம் செயல்படுத்தி, இன்னும் 300–க்கும் மேற்பட்ட சேவைகளை இந்த மையங்கள் மூலமாக வழங்குவதற்குண்டான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, இன்றைக்கு பல அரசு அலுவலகங்களில் ஏற்கெனவே இருந்த typewriter-களை கணினிகளாக replace செய்திருக்கிறார்கள். அந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்ற உத்தரவிற்கிணங்க, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் ஒத்துழைப்போடு தலைமைச் செயலகத்தில் இருக்கக்கூடிய 3,640 பணியாளர்களுக்கு, அனைத்துத் துறைகளைச் சார்ந்த பணியாளர்களுக்கும் கணினி குறித்த தெளிவான பயிற்சி வழங்கப்பட்டு, இன்றைக்கு தலைமைச் செயலகத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு துறையாக முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு வருகிறது. இவையெல்லாம் வருகின்ற நேரத்தில், தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மக்களும், அரசு அலுவலகங்களில் சென்று காத்துக்கிடந்து தங்களுடைய சேவைகளை, அரசின் திட்டங்களை, பணப் பரிவர்த்தனைகளை, சான்றிதழ்களைப் பெறுவது போன்றவை தவிர்க்கப்பட்டு, இ–சேவை மையங்கள் மூலமாகவும், அவர்களின் கையில் உள்ள அலைபேசி மூலமாகவும் விண்ணப்பித்து பெறக்கூடிய ஒரு நிலை விரைவில் உருவாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்களது தொகுதியில் 16 இ–சேவை மையங்கள் இருக்கின்றன. அவர் கேட்டிருக்கக்கூடிய பெருமாநல்லூர் பகுதியில் 2 இ–சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. கூடுதலாக அங்கே தேவைப்படுகின்றது என்று சொன்னால், அதைத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்

2022 ஏப்ரல் 19]

என்பதைக் கூறிக்கொள்கின்றேன். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் புதிய இ–சேவை மையங்கள் அமைக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி வருகிறார்கள். எந்தெந்தப் பகுதிகளில் உறுதியாகத் தேவையிருக்கிறதோ, அந்தப் பகுதிகளைக் கண்டறிந்து அதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பார்கள் என்றால், நிச்சயமாக அங்கே இ–சேவை மையங்களைத் தொடங்குவதற்கான வழிவகை செய்யப்படும் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள்.

திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் எங்கள் திருப்பூர் மாவட்டத்தில் வந்து குடியேறியிருக்கின்றார்கள். நான் கேட்ட பகுதியில், கிட்டத்தட்ட 60,000–க்கும் மேற்பட்ட ஜனத்தொகை இருக்கின்றது. ஆகவே, விதியின்படி, 1½ கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு இ–சேவை மையம் அமைக்கலாம் என்ற நிலை உள்ளது. அந்த அடிப்படையில் அதை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திலும் தமிழக அரசின் சார்பாக இ–சேவை மையம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டால் (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைக்கும் என்பதால், அவ்வாறு அமைக்க அரசு நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.

மேலும், தொழில் நகரமான திருப்பூர் மாநகரில் மக்கள்தொகை அதிகமாக இருப்பதால், அதிகப்படியான மக்கள் online மூலம் சான்றுகள் பெற பெரும் சிரமப்படுகிறார்கள். அதனால், தனியார் இ–சேவை மையம் அமைக்க, ID பெற விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த நபர்களுக்கு, விரைவில் ID வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

[2022 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர்கள் எல்லோரும் அவர்களுடைய அலுவலகங்களில் இ–சேவை மையம் ஆரம்பிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், சென்ற முறை நாம் சட்டமன்றக் கூட்டம் நடத்திய இடத்தில் வைக்கப்பட்டிருந்த table desktop— அந்தக் கணினியை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கி, அவர்களுடைய அலுவலகங்களில் இ–சேவை மையம் தொடங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ஓர் உத்தரவை நம்முடைய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். நிச்சயமாக அவர் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு இதனை எடுத்துச்சென்று, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள்.

திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்திலுள்ள Tamil Nadu Arasu Cable TV நிறுவனம்மூலம் நடத்தப்படும், அனைத்து வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாநகராட்சியிலுள்ள இ–சேவை மையத்தில் தரவுப் பணியை மேற்கொள்ளும் பணியிடங்கள், சில இடங்களில் காலியாக உள்ளதென கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, அதனைப் பூர்த்திசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இ–சேவை மையங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் அனைவரும் contract staff, யார் எந்தத் துறையின்மூலம் பணி பெற்றிருக்கிறார்களோ, சம்பந்தப்பட்ட துறையின் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுகின்ற நபர்கள் அவர்கள். இந்த ஒப்பந்தப் பணியாளர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருந்தன.

2022 ஏப்ரல் 19]

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு, அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியங்கள்கூட அவர்களுடைய வங்கிக் கணக்கில் சேருவதை நாங்கள் உத்தரவாதப்படுத்தியிருக்கின்றோம். இப்போது அந்தப் பணியாளர்கள் எல்லாம் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுடைய ஊதியம் எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ, அது தெளிவாக அவர்களுடைய வங்கிக் கணக்கில் சென்றடைகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருப்பதைப்போன்று, அந்தப் பணியாளர்கள் எங்கேயாவது குறைவாக இருக்கின்றார்கள் என்று சொன்னால், நாங்கள் நிச்சயமாக ஆய்வுக் கூட்டம் நடத்துகின்ற நேரத்தில் அதைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு பணியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஒர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) சரக்கு மற்றும் சேவை வரி உயர்த்தப்படுவதாக வந்த செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

முற்பகல் 11–30

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் சரக்கு மற்றும் சேவை வரி உயர்த்தப்படும் என்ற செய்தி வந்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களெல்லாம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் சரக்கு மற்றும் சேவை வரி மேலும் உயர்த்தப்பட்டால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் முதலான எல்லாப் பொருட்களின் விலைவாசியும் உயரும், மக்கள்*